69 ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

25.10.2022 முதல் 31.10.2022 முடிய

NKT முத்து ஹால்,
4 T P கோயில் 2ஆவது சந்து,
ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி,
சென்னை - 600005

சிறப்பு நிகழ்ச்சிகள்

- ஆறுமுக லக்ஷார்ச்சனை / த்ரிசதி
- வேதபாராயணம்
- சொற்பொழிவு
- அருணகிரிநாதர் விழா
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்

69 ஆவது ஆண்டு
ஷஷ்டிப் பெருவிழா

வரிய பதத்தின் அருவி இருப்பிடம்
அமையும் எனக்கிடம் உனது பதச்சரண்
மருவு திருப்புகழ் அருள எனக்கினி அருள்வாயே

முருகன் திருவருட் சங்கம்

சென்னை-600005 044-2854 4713

வாக்கும் உனதுள நோக்கும் அருளுவன்
ஏத்த புகழ் அடியார்க்கும் எளியனை
வாழ்த்த இருவினை நீக்கும் முருகனை மருவாயோ

(பாட்டில் உருகிலை - தீர்த்த மலைத் திருப்புகழ்)

69 ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா

25-10-2022 செவ்வாய்க்கிழமை முதல்
31-10-2022 திங்கட்கிழமை முடிய

விழா நடைபெறும் இடம் :

N.K.T. முத்து ஹால்

4, T.P. கோயில் 2ஆவது சந்து, ஐஸ் ஹவுஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
கைப்பேசி : **98417 38069**

முருகனைப் புகழ்ந்து பாட, நல்ல வாக்கையும், உயர்ந்த உள்ளத்தையும், நல்ல கருத்தையும் அருள்புரிவான். ஆதலால் அடியார்க்கு எளியவரை, வாழ்த்துவோருடைய இருவினைகளையும் நீக்கி அருள்பவனுமாகிய முருகனை நீ சேர்ந்து உய்ய மாட்டாயோ?

எப்பொழுதும் வந்திக்கைக்(கு) அற்ற எனைப் பின்
பிழை உடன்பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையை என் செப்பிச் செப்புவது ஒப்பு ஒன்று உளதோதான்

(கனிதரும் - காஞ்சித் திருப்புகழ்)

உ
முருகா சரணம்

முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954 தொலைபேசி : 2854 4713

ஆனைமுகவற்கு இளைய ஐயனின் திருவருளினால் சங்கத்தின் 69ஆவது ஆண்டு **ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா 25-10-2022 செவ்வாய்க்கிழமை** முதல் **31-10-2022 திங்கட்கிழமை** முடிய ஏழு தினங்கள் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வண்ணம் திருவல்லிக்கேணி 4, துளசிங்க பெருமாள் கோயில் 2ஆவது சந்தில் அமைந்துள்ள **N.K.T. முத்து ஹாலில்** நடைபெற உள்ளது.

அடியார்கள் யாவரும் நமது சங்கத்தின் சார்பில் நடைபெறும் இந்த 69ஆவது ஆண்டு **ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா** நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன், **தங்களால் இயன்ற அளவு அரிசி, பருப்பு** மற்றும் **பொருளுதவிகளை** அளித்து விழா நிகழ்ச்சிகள் இனிதே நடைபெறுவதற்குத் தங்களுடைய பேராதரவினை அளித்து, வள்ளி படர்சாரல் வள்ளிமலை மேவு வள்ளி மணவாளப் பெருமானின் திருவருளினால் வாழ்க்கையில் இஹபர சௌபாக்கியத்துடனும், சகல செல்வயோக மிக்க பெருவாழ்வுடனும் வாழப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
முருகன் திருவருட் சங்கத்தார்

எப்பொழுதும் வணங்குதலே இல்லாத அடியேனை, இந்த குறைகளை உடையவன் என்று தாங்கள் அறிந்த பின்பும், என்னுடைய குற்றங்களைப் பொறுத்து உடன்பட்டு என்னை உமது அடியார் கூட்டத்துள் ஒருவனாக வைத்த, உமது கருணையை அடியேன் என்ன என்று சொல்லிப் புகழ்வது? அந்தக் கருணைக்குச் சமானம் ஒன்று இருக்கின்றதோ? இல்லை.

முட்டர்க்கு எட்டாதது நான்மறை
எட்டிற்கு எட்டாது எனவே வரும்
முற்பட்டு அப்பாலையில் ஆவது புரிவாயே

(மக்கட்குக் - காஞ்சித் திருப்புகழ்)

உ
முருகா சரணம்

முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954 தொலைபேசி : 2854 4713

நிகழ்ச்சி நிரல்

25-10-2022 செவ்வாய்க்கிழமை முதல் **30-10-2022** ஞாயிற்றுக் கிழமை முடிய ஆறு தினங்களும் காலை முதல் பிற்பகல் வரை **ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு** அபிஷேக ஆராதனைகளுடன், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம், அதோமுகம் ஆகிய ஆறு முகங்களுக்குரிய லக்ஷார்ச்சனையும், பஜனை வழிபாடும், மாலையில் வேதபாராயணமும், இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. **29-10-2022** சனிக்கிழமை அன்று காலை 7.30 மணி முதல் அகண்ட திருப்புகழ் பஜனை வழிபாடும் மாலையில் வேத பாராயணமும் சொற்பொழிவும் **30-10-2022** ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு **"மஹா ஸ்கந்த ஷஷ்டி"** கணபதி ஹோமத்துடன், ஏகாதச ருத்ர ஜபமும், குமார போஜனமும், அன்னதானமும் மற்றும் **31-10-2022** திங்கட்கிழமை அன்று காலை **"ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாண வைபவமும்"** நடைபெற உள்ளன.

இங்ஙனம்
முருகன் திருவருட் சங்கத்தார்

மூடர்களுக்கு எட்டாதது நான்கு வேதங்களாலும் எட்ட முடியாததாய் விளங்குவது; எப்பொருளுக்கும் முற்பட்டதாய் அப்பாலுக்கு அப்பாலாய் விளங்குவதான அரும் பொருளை அடியேனுக்கு உபதேசித்து அருள்வீராக!

மேதினிக்கு உள் அபத்தன் எனப்பல
பாடுபட்டு புழுக்கொள் மலக்குகை
வீடுகட்டி இருக்கும் எனக்கும் நின் அருள்தாராய்.

(ஆலம் - திருவானைக்காத் திருப்புகழ்)

25-10-2022 செவ்வாய்க்கிழமை

காலை 08.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை	**ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஈசானமுக (மேல் நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை**

இன்றைய தினம் மாலை **சூரிய கிரகணம்** (Solar Eclipse) ஸம்பவிக்க இருப்பதினால் மாலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படவில்லை.

26-10-2022 புதன்கிழமை

காலை 07.00 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை	**ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத்புருஷமுக (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை**
மாலை 04.55 மணி முதல் மாலை 05.55 மணி வரை	**வேத பாராயணம்**
மாலை 06.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை	**சொற்பொழிவு ஸ்ரீவித்யா உபாசகர் ஸ்ரீ கணேச சர்மா,** B.A., M.B.A. அவர்கள் தலைப்பு "**ஞான பண்டித சுவாமி நமோ நம.**"

பூமியில் பொய்யன் என்று பேர் பெற்று, பல துன்பங்களை அடைந்து, புழுக்கள் நிரம்பிய மலக் குகையாம் இந்த உடம்பாகிய வீட்டை, எடுத்திருக்கும் எனக்கும் உமது திருவருளைத் தந்தருள்வீராக.

தேட்டம் உறத்தேர்ந்தும் அமிர் (து) ஆம் எனவே ஏகிநமன்
ஓட்டிவிடக் காய்ந்து வரிவேதன் அடையாளம் அருள்
சீட்டுவரக் காண்டு நலிகாலன் அணுகா நின் அருள் அன்புதாராய்

(வாட்டி எனை - திருக்கூடலையாற்றூர்த் திருப்புகழ்)

27-10-2022 வியாழக்கிழமை

காலை 07.30 மணி முதல்
பிற்பகல் 12.30 மணி வரை
ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன்
முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை
தொடர்ந்து தக்ஷிண (தெற்கு நோக்குதல்)
அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை

மாலை 04.55 மணி முதல்
மாலை 05.55 மணி வரை
வேத பாராயணம்

மாலை 06.00 மணி முதல்
இரவு 08.00 மணி வரை
இசைச் சொற்பொழிவு நிகழ்த்துபவர்
கலைமாமணி **இசைக்கவி ரமணன்**
தலைப்பு : **"ஸ்கந்தனே காப்பு"**

28-10-2022 வெள்ளிக்கிழமை

காலை 07.30 மணி முதல்
பிற்பகல் 12.30 மணி வரை
ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன்
முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை
தொடர்ந்து உத்திர (வடக்கு நோக்குதல்)
வாமதேவமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை

மாலை 04.55 மணி முதல்
மாலை 05.55 மணி வரை
வேத பாராயணம்

மாலை 06.00 மணி முதல்
இரவு 08.00 மணி வரை
சொல்லின் செல்வன் **ஸ்ரீ R.N. பரசுராமன்** அவர்கள்
தலைப்பு : **"முருகனும் குருநாதனும்"**

உம்மிடம் அன்பில்லாமல், பொருள் தேடுவதிலேயே தேர்ச்சி பெற்று அமிர்தம் போல் தீய வழியில் சென்று அழியும் என்னைப் பற்ற இயமன் அனுப்ப நியமிக்கும் படியான பிரமன் எழுதிய அடையாளத்துடன் கூடிய ஓலை வரப்பார்த்து, துன்புறுத்துகின்ற காலன் எனை அணுகாதபடி, உமது திருவருள் அன்பை அருள் புரிவீர்.

மாதா நாதனும் வீற்றிருந்திடும்
வீடே மூணொளி காட்டி சந்திர
வா(கு) ஆர்தேன் அமு(து) ஊட்டி என்றனை உடன் ஆள்வாய்

(மூலாதார - வைத்தீஸ்வரன் கோயில் திருப்புகழ்)

29-10-2022 சனிக்கிழமை

காலை 07.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை	**ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஸத்யோ ஜாதமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை**
காலை 07.30 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை	**ஸ்ரீ அருணகிரிநாதர் விழா திருப்புகழ் அகண்ட பஜனை வழிபாடு முருகன் திருவருட் சங்கத்தினர் திருப்புகழ் அநுபூதி மற்றும் அலங்காரம் வகுப்புகளிலிருந்து சில பாடல்கள்**
மாலை 04.00 மணி முதல் மாலை 04.55 மணி வரை	**வேத பாராயணம்**
மாலை 05.00 மணி முதல் இரவு 07.00 மணி வரை	**ஷஷ்டி விழா மலர் வெளியீடு "ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அஷ்டபதி, திருப்புகழில் வள்ளி கல்யாணம் மற்றும் வேல் மாறல் அடங்கியது.**
இறை வணக்கம்	குமாரி **சிவப்ரியா**
வரவேற்புரை	**ஸ்ரீ நாராயணன் சந்த்ரசேகர்** (ஸ்ரீ **N. சந்த்ரசேகர்**) செயலாளர், முருகன் திருவருட் சங்கம்
துவக்கஉரை	**கோயில் திருமுறைமணி ஸ்ரீ S. குஹாநந்தன்** S/o. தெய்வத்திரு. **அருளிசைமணி S.V. ஸுப்ரமணியன்,** **பொங்கி மடாலயம், சென்னை - 600 061.**

பிரணவ மந்திர பீடத்தின் மீது பராசக்தியும், பரமசிவனும், எழுந்தருளியிருக்கும் வீட்டையும் சோம சூரிய அக்னி என்ற மூன்று ஒளியையும் காட்டியருளி, சந்திர காந்தி நிறைந்த தேன் போன்ற இனிய அமுதத்தைப் பருகச் செய்து, அடியேனை இக்கணமே ஆண்டருள்வீராக.

கருணை அடியாரொடு அருணையில் ஒரு விசை
சுருதிபுடைதர வரும் இருபரிபுர
கமலமலர் அடி கனவிலும் நனவிலும் மறவேனே

(குமர குருபர - திருவண்ணாமலைத் திருப்புகழ்)

தலைமை உரை மற்றும் மலரினை வெளியிட்டு வழங்குபவர்	**ஸ்ரீவித்யா உபாசகர்** **ஸ்ரீ கணேச சர்மா,** B.A., M.B.A. அவர்கள்
சிறப்பு விருந்தினர்	**Dr. V.S. நாராயணன்** Senior General Manager, Dinamalar, Chennai - 14.
மலரின் பிரதிகளை பெறுபவர்கள்	1. இசைவாணர் **ஸ்ரீ V. லக்ஷ்மி நாராயணன்,** AMIE, M.S. பள்ளிக்கரணை, சென்னை - 600 100. 2. **ஸ்ரீ N. அனந்தகிருஷ்ணன்** பெங்களூரு. 3. **ஸ்ரீ K. வெங்கட்ராமன்,** C.A. பெங்களூரு 4. **ஸ்ரீ N. பாலஸுப்ரஹ்மணியன்** இராமாபுரம், சென்னை 5. **ஸ்ரீ D. நீலகண்ட சிவாச்சாரியார்** இராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28 6. **ஸ்ரீ D. நடராஜ சிவாச்சாரியார் (ஸபாபதி)** சென்னை - 600 028 7. **ஸ்ரீ ஜெயகோபால்,** Prop. N.K.T. Hall திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. 8. **ஸ்ரீ G. தியாகராஜன்,** பாண்டுரங்க பஜன் மண்டலி, Vice President
நன்றியுரை	**ஸ்ரீ V. கணேசன்** தலைவர், முருகன் திருவருட் சங்கம்
இரவு 7.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை	சொற்பொழிவு **ஸ்ரீவித்யா உபாசகர்** **ஸ்ரீ கணேச சர்மா,** B.A., M.B.A. அவர்கள் தலைப்பு : **"ஞான பண்டித சுவாமி நமோ நம:"**

கருணை நிறைந்த அடியார்களுடன் திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் ஒரு முறை, உபநிடதங்கள் அருகில் துதித்துக் கொண்டு வர, எழுந்தருளி, பரிபுரம் என்ற ஆபரணத்துடன் கூடியதும், தாமரை மலர் போன்றதுமாகிய இரண்டு திருவடிகளை கனவு நிலையிலும், நனவு நிலையிலும் எப்பொழுதும் அடியேன் மறக்கமாட்டேன்.

சுமடமதாய் வம்பு மால் கொளுந்திய
திமிரரொடே பந்தமாய் வருந்திய
துரிசு அற ஆநந்த வீடு கண்டிட அருள்வாயே

(குருதி புலால் - திருவானைக்காத் திருப்புகழ்)

30-10-2022 ஞாயிற்றுக்கிழமை

மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

காலை	06.00 மணி	கணபதி ஹோமம்
காலை பிற்பகல்	07.30 மணி முதல் 01.00 மணி வரை	ஏகாதச ருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து அதோமுக (கீழ்நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை
காலை முற்பகல்	09.00 மணி முதல் 11.00 மணி வரை	திருப்புகழ், பக்தி பாடல்கள் இன்னிசை ஸ்ரீமதி கோமதிஸ்ரீ குழுவினர்கள்
முற்பகல் பிற்பகல்	11.05 மணி முதல் 01.00 மணி வரை	திருப்புகழ் மற்றும் வேல்மாறல் பாராயணம் முருகன் திருவருட் சங்கத்தார்
பிற்பகல்	01.30 மணி	ஆறுமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனைப் பூர்த்தி தொடர்ந்து குமாரபோஜனம் அன்னதானம்
மாலை மாலை	04.00 மணி முதல் 05.00 மணி வரை	வேத பாராயணம்
மாலை இரவு	05.05 மணி முதல் 06.55 மணி வரை	முருகப் பெருமானுக்கு ஆறுவித மலர்களைக் கொண்டு ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை

அறிவிலியாக பயனில்லாததும், ஆசைகளை தூண்டுவதுமாகிய, கொடிய ஆணவ இருள் கொண்டவர்களுடன் கூடி வருத்தம் அடைந்து குற்றமானது, என்னை விட்டு விலகவும், பேரின்ப வீட்டை அடியேன் காணும் படியாகவும், அருள்புரிவீராக.

துக்கம் வெந்துவிழ ஞானம் உண்டு குடில்
வச்சிரங்கள் என மேனி தங்கம் உற
சுத்த அகம் புகுத வேத விந்தையொடு புகழ்வேனோ

(கட்டி முண்டகர - சிதம்பரம் திருப்புகழ்)

இரவு	07.05 மணி முதல்	**சொற்பொழிவு**
இரவு	08.30 மணி வரை	நிகழ்த்துபவர் : **ஸ்ரீவித்யா உபாசகர் ஸ்ரீ கணேச சர்மா,** B.A., M.B.A. அவர்கள் தலைப்பு : **"ஞான பண்டித சுவாமி நமோ நம:"**
இரவு 08.30 மணி முதல்		**திருப்புகழ் பஜனை வழிபாடு**
இரவு 09.30 மணி வரை		**முருகன் திருவருட் சங்கத்தினர்**

31-10-2022 திங்கட்கிழமை

காலை	07.30 மணி முதல்	**திருப்புகழில் தேவசேனா வள்ளி கல்யாணம்**
பிற்பகல்	01.00 மணி வரை	**ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர் மற்றும் முருகன் திருவருட் சங்கத்தினர்**
பிற்பகல்	02.00 மணி முதல்	**விழா நிறைவு இசை**
பிற்பகல்	02.30 மணி முதல்	**முருகன் திருவருட் சங்கத்தினர்**

பிறவித் துன்பமானது வெந்து நீறாகி ஒழிய, ஞானமிர்தத்தைப் பானம் செய்து, உடம்பு வச்சிரமயமாகி, பொன் மேனியாக விளங்கி, நிர்மலமான முத்தி வீடு அடியேனுக்கு எய்த, வேத விசித்திரத்துடனே உமது திருப்புகழை எடுத்துப் பாடுவேனோ!

குறித்தே முத்திக் (கு) மறா இன்பத்
தடத்தே பற்றிச் சகமாயம் பொய்க்
குலம் கால் வற்றச் சிவஞானம் பொற் கழல்தாராய்

(சரக்கே - திருக்காளத்தித் திருப்புகழ்)

போஷகர்கள்

ஸ்ரீ முருகா ரமணி	தியாகராயநகர், சென்னை - 600 017.
ஸ்ரீ பாலசந்திரன் K.N.	மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்வாமிநாதன் V.	நங்கைநல்லூர், சென்னை - 600 061
ஸ்ரீ சந்த்ரமௌளி P.	மந்தைவெளி, சென்னை - 600 028
ஸ்ரீ வேங்கடராமன் V.	அரும்பாக்கம், சென்னை - 600 106
ஸ்ரீ ஸதாசிவம் K.S.	வடபழநி, சென்னை - 600 026
ஸ்ரீ அனந்தகிருஷ்ணன் N.	பங்களூரு, கர்நாடகா - 560 066
ஸ்ரீ கடம்பவன ஸுந்தரம் N.	காஞ்சிபுரம், தமிழ்நாடு - 631 501

உமது குறிக்கொண்டு முத்திக்கு மாறுதல் இல்லாத இன்ப வழியைக் கைப்பற்றி, உலகமாயை, பொய், குலம், குடி என்கின்ற பற்றுக்கள் வற்றிப் போக சிவஞானமாகிய உமது அழகிய திருவடியைத் தந்து அருள்வீராக.

கடிது உல(கு) எங்கணும் தாடி இட்டு வந்த
மயிலும் இலங்(கு) அலங்கார பொற்சதங்கை
கழல் ஒலி தண்டையும் காலும் ஒக்க வந்த வரம் எனக்கு அருள் கூர்வாய்

(தமர குரங்களும் - திருவண்ணாமலைத் திருப்புகழ்)

தலைவர் :

ஸ்ரீ கணேசன் V. அபிராமபுரம், சென்னை - 600 018

உப தலைவர் :

ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் K.V. பெசன்ட் நகர், சென்னை - 600 090.

செயலாளர் :

ஸ்ரீ சந்த்ரசேகர் N. திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

பொருளாளர் :

ஸ்ரீ நாராயணன் V.P. மயிலை, சென்னை - 600 004.

இணைச் செயலாளர்கள் :

ஸ்ரீ ஸ்ரீதர் ஸுந்தரம் மயிலை, சென்னை - 600 004
ஸ்ரீ ஜானகிராமன் V. நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

செயற்குழு உறுப்பினர்கள் :

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் V. பள்ளிக்கரணை, சென்னை - 600 100
ஸ்ரீ இராமமூர்த்தி V. மடிப்பாக்கம், சென்னை - 600 091
ஸ்ரீ விச்வநாதன் N. (Jr.) அபிராமபுரம், சென்னை - 600 018
ஸ்ரீ ஸ்ரீதரன் S. மந்தைவெளி, சென்னை - 600 028
ஸ்ரீ கணேஷ்ராமன் M. வடபழநி, சென்னை - 600 026
ஸ்ரீ மோகன் S. அபிராமபுரம், சென்னை - 600 018
ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் S. தியாகராய நகர், சென்னை - 600 017
ஸ்ரீ ரெங்கநாதன் K. முகலிவாக்கம், சென்னை - 600 125
ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி S. இராமாபுரம், சென்னை - 600 089

விரைவாக உலகமெல்லாம் பிரயாணம் செய்த மயில் வாகனமும், ஒளி செய்வதும், அணியுடன் கூடியதுமான பொன்னாலாகிய சதங்கை, வீரக்கழல், தண்டை போன்ற திரு ஆபரணங்களுடன் கூடியதுமாகிய திருவடியும் பொருந்த அடியேன் முன் எழுந்தருளி வந்து வரம் தந்து அருள்புரிவீர்.

கதிக்கு நாதன் நீ! உனைத் தேடியே புகழ்
உரைக்கும் நாய் எனை அருட்பார்வை ஆகவெ
கழற்குள் ஆகவெ சிறப்பு ஆனதாய் அருள் தரவேணும்

(விலைக்கு - திருக்கொணாமலைத் திருப்புகழ்)

வெண்பா

முருகன் திருவருட் சங்கத்தில் நெஞ்சம்
உருகிப் புகுவார் தமக்குப் - பெருகுமே
அன்றே பெரும் பொருளும் ஆண்டவன் பேரருளும்
நன்றே நலம் பலவும் காண்

- அருட்கவிமணி காமாக்ஷிதாஸர்
(ஸ்தாபகர் - முருகன் திருவருட்சங்கம்)

வஷிஷ்டர், காசிபர், தவத்தான யோகியர்
அகத்திய மாமுநி, இடைக்காடர், கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோலமாய் வரு முருகோனே

பரகதிக்கு தலைவர் நீரே! உமது திருவடியைத் தேடி திருப்புகழ் பாடுகின்ற அடியேனைத் திருவருட் பார்வையாகப் பார்த்து, உமது சரணார விந்தங்களுக்கு ஆளாகுமாறு சிறந்ததாகிய தாயின் கருணையை ஒத்த திருவருளைத் தந்து அருள வேண்டும்.

பழைய அடியவருடன் இமை யவர்கணம்
இருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ வரும் அதில் அருணையில் ஒரு விசை வரவேணும்

கொடிய மறலி - திருச்செங்கோடுத் திருப்புகழ்



பழைமையான அடியார்களுடனும், தேவர்களுடைய கூட்டம் இருபக்கங்களிலும், பெருமை மிகுந்த தமிழ்ப் பாடலையும், வேதகீதங்களையும், துதித்துக் கொண்டு வரவும், முன்னொருமுறை அடியேன் முன் வந்தருளியதுபோல், திருவண்ணாமலையில் இன்னொரு முறை வந்தருள வேண்டும்.